**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08022023-6728

Volume: 8

Issue: 2

Month: October

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 30.07.2023

Accepted: 05.09.2023

Published: 01.10.2023

Citation:
Sankar, M. "Paththuppaattu in Classicism View." *Shanlax International Journal of Tamil Research,* vol. 8, no. 2, 2023, pp. 76–88.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i2.6728

*Corresponding Author:
sankartamilskcgri@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Paththuppaattu in Classicism View

**M. Sankar**
*Assistant Professor, Department of Tamil*
*Sri Kalisawri College (Autonomous), Sivakasi, Tamil Nadu, India*

**Abstract**
Government of Tamil Nadu established the classical character of Tamil. Tamil Language is ancient; Rich in many literary grammars; The classical merit of Tamil has been proved by the collaboration of various scholars as traditional. Today 41 texts are listed by the Government of Tamil Nadu as classically deserving. Decimals have a unique, special place in that list. Because kings or vultures are the leaders of the song. The researcher is of the opinion that the texts (Ten Idylls) must have been song by royal poets. Nevertheless, the tenth is a repository of ancient Tamil culture, both internal and external. This article seeks to explore Ten Idylls by presenting an explanation of classics and classical qualifications.

**Key Words:** Ten Idylls, Classical Literature, Sangam Literature.

**References**

1. Agasthiyalingam, S. (2010) Sanga Ilakkiyangal Sevviyal Ilakkiyangaley, Manivasagar Publication, Chennai.
2. Arunachalam, M. & Jeyakumar, P. (2011) Tamilum Ulaga chemmozhigalum, Pavai Publication, Chennai.
3. Rasamanikkanar, M. (2010) Sanga Ilakkiya Varalaru M.R.Kalanciyam - III, Kavya, Chennai.
4. Ilavarasu, Soma, (2007) Nannool Sollathikaram Kandikaiurai, Manivasagar Publication, Chennai.
5. Gunasekaran, Karu.Azha & June Laranse, S (2011) Ulzhaga Chemmozhigal (Semminar Katturaigal), International Institute of Tamil Studies, Chennai.
6. Kulanthaisamy, V.S. (2011) Ulaga Semmozhikalin Varisaiil Tamil, Pavai Publication Chennai. Sarathammbal, C. (2010) Sevviyal, Cellappa Publication, Madurai.
7. Sarathambal, C. (2010) Sanga Sevviyal, Menakshi Publication, Madurai.
8. Srinivasan, S.P. (2013) Paththupaatil Varunanai Maraphugal, Sekar Publication, Chennai.
9. Subramaniyan, S.V. (2009) Tholkappiyam Telivurai, Manivasagar Publication, Chennai.
10. Suryanarayana Sastri, V.G. (2010) Tamil Mozhiin Varalaru, International Institute of Tamil Studies, Chennai.
11. Nagarajan, V. (2004) Paththuppattu - II Volume, NCBH, Chennai.
12. Pitchai, A. (2011) Sanga Ilakkiya Yappiyal, NCBH, Chennai.
13. Mohan, R. (2004) Paththuppattu - I Volume, NCBH, Chennai.

# செவ்வியல் நோக்கில் பத்துப்பாட்டு

***முனைவர் மு. சங்கர்***
உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழ்மொழி தொன்மையான இலக்கிய இலக்கண வளமுடையது; மரபுடையது எனப் பல்வேறு அறிஞர்களின் கூட்டுழைப்பால் தமிழின் செவ்வியல் தகுதி நிரூபிக்கப்பட்டது. இன்று 41 நூல்கள் செவ்வியல் தகுதியுடையனவாகத் தமிழக அரசால் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன. அப்பட்டியலுள் பத்துப்பாட்டு நூல்களுக்குத் தனித்த, சிறப்பான இடமுண்டு. ஏனெனில் அரசர்கள் அல்லது வள்ளல்கள் பாட்டுடைத் தலைவர்களாக உள்ளனர். அந்நூல்கள் அரசவைப் புலவர்களால் பாடப்பெற்றிருக்க வேண்டும் என்பது ஆய்வாளர் கருத்து. பண்டைத் தமிழரின் அகப்பண்பாட்டையும் புறப்பண்பாட்டையும் எடுத்துரைக்கும் பெட்டகமாகப் பத்துப்பாட்டுத் திகழ்கின்றது. இக்கட்டுரை செவ்வியல் விளக்கத்தையும் செவ்வியலுக்குரிய தகுதிகளையும் முன்வைத்துப் பத்துப்பாட்டு நூல்களை ஆராய முற்படுகின்றது.*
***திறவுச் சொற்கள்:*** *செவ்வியல் இலக்கியம், பத்துப்பாட்டு, சங்க இலக்கியம்.*

## முன்னுரை

பழந்தமிழரின் வாழ்வியலை எடுத்துக்காட்டுகின்றன எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும். இவை காதலையும் வீரத்தையும் பாடுகின்றன. அவற்றுள் காதலைப் பற்றிய பாடல்களே மிகுதி (1862). சங்கப் புலவர்களின் இக்கொடையைப் பின்வந்தோர் பொருளடிப்படையிலும் எண்ணிக்கை அடிப்படையிலும் அடிவரையறை அடிப்படையிலும் பா அடிப்படையிலும் தொகுத்து வைத்தனர். அவை திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டிப்பாலை, மலைபடுகடாம் என்பனவாம். இவற்றுள் செம்பாதி நூல்கள் ஆற்றுப்படை நூல்களே. அகத்தைப் பாடுபொருளாகக் கொண்டவற்றுள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப் பாலை ஆகியன அடங்கும். புறத்தைப் பாடுபொருளாகக் கொண்டது மதுரைக்காஞ்சி. இந்நூல்களில் செவ்விலக்கிய அறிஞர்கள் வரையறுக்கும் செவ்வியல் கூறுகள் நிரம்பிக் காணப்படுகின்றன. அவற்றை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## முன்னாய்வுகள்

பத்துப்பாட்டு நூல்கள் குறித்துப் பல ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அவற்றுள், மா.இராசமாணிக்கனாரின் பத்துப் பாட்டு ஆராய்ச்சி, ச.பொ.சீனிவாசனின் பத்துப்பாட்டில் வருணனை மரபுகள், பொ.கலைவாணியின் பத்துப்பாட்டில் இலக்கியக் கூறுகள், கி. சிவாவின் பத்துப்பாட்டின் எடுத்துரைப்பியல், ர.காளீஸ்வரியின் பத்துப்பாட்டில் தொழில்கள், அ.கலைவாணியின் பத்துப்பாட்டில் ஆளுமை உள்ளிட்ட ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. செவ்வியல் குறித்த ஆய்வில் செ.சாரதாம் பாளின் பங்குக் குறிப்பிடத்தக்கது. அவர் எழுதிய செவ்வியல் (2010) என்ற நூல் செவ்வியல் கோட்பாட்டாய்வை வலியுறுத்துகின்றது. மேலும் அவர்தம் முனைவர் பட்ட ஆய்வும் நூலாக (சங்கச் செவ்வியல் (சங்க - கிரேக்க ஒப்பீடு - 2010) வெளிவந்துள்ளது. இவை தவிர, ச. அகத்தியலிங்கம் எழுதிய

சங்க இலக்கியம் செவ்வியல் பார்வை (2010) என்ற நூலும் சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே (2010) என்ற நூலும் பி.சேதுராமனின் ஆற்றுப்படை இலக்கியத்தில் தமிழர் வாழ்வியல் (2011) என்ற நூலும் குறிப்பிடத்தக்கவை. திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் ரா. ரவி என்பவர் எட்டுத்தொகை இலக்கியங்களில் செவ்வியல் பண்புகள் (2013) என்ற தலைப்பில் ஆய்வு செய்து பட்டம் பெற்றுள்ளார். ச.பொ.சீனிவாசன் பத்துப்பாட்டில் வருணனை மரபுகள் (2013) எனும் நூலை எழுதியுள்ளார். செவ்வியல் நோக்கில் செம்மொழி இலக்கியங்கள் (2008) எனும் தலைப்பில் மெய்யப்பன் பதிப்பகம் இரண்டு தொகுதிகளை வெளியிட்டுள்ளது. இவ்வாய்வுகள் செவ்வியல் இலக்கியங்களின் சீர்மையையும் நீர்மையையும் பறைசாற்றுவனவாக அமைந்துள்ளன.

**செவ்வியல் விளக்கம்**

செவ்வியல் என்ற கருத்துருவாக்கம் கிரேக்க, உரோமானிய இலக்கிய ஆக்கங்களை வைத்து வகுக்கப்பட்டதாயினும் காலப்பழமையும் தொன்மையும் மொழி வளமும் இலக்கிய வளமும் நிறைந்த மொழிகளுக்கு இச்சொல் பொருத்தமுடையது. இச்சொல்லை ஆங்கிலத்தில் Classicism என்று அழைப்பர். Classicism என்றால் உயர்ந்தது என்பது பொருள். இச்சொல் கிளாசிகஸ் எனும் இலத்தீன் சொல்லில் இருந்து தோன்றியது. இச்சொல்லைக் கலைகளோடும் சித்திரங்களோடும் இசையோடும் தொடர்புபடுத்தி வழங்கினர். தமிழில் இச்சொல்லைச் செவ்வியல் என்ற பெயரால் அழைக்கின்றோம். இச்சொல்லானது செம்மை என்ற சொல்லில் இருந்து தோன்றியது எனலாம். குறுந்தொகையில் (18) செவ்வி என்ற சொல் இடம் பெற்றுள்ளது. அங்கு இச்சொல் "சிறந்த" என்ற பொருளில் வருகின்றது. செவ்வியல் மொழி, செம்மொழி என்ற சொற்கள் ஒரே பொருண்மை உடையனவாகக் கருதப்படுகின்றன. செம்மொழி பற்றிப் வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார், திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி புகல் "செம்மொழி" யாம் என்பது இலக்கணம். இம்மொழி நூலிலக்கணம் தமிழ் மொழியின் கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம். என்னை? இடர்ப்பட்ட சொன்முடிபுகளும் பொருண் முடிபுகளுமின்றிச் சொற்றான் கருதிய பொருளைக் கேட்டான் தெள்ளிதினுணர வல்லதாய்ப் பழையன கழிந்து புதியன புகுந்து திருத்த மெய்தி நிற்றலே திருந்திய பண்பெனப்படுவது. இது தமிழ்மொழியின்கண் முற்றும் அமைந்திருத்தல் காண்க (சூரிய நாராயண சாஸ்திரியார், வி.கோ., 2010:71,72) என்கின்றார். இவரது இக்கூற்றுத் தமிழின் செம்மொழித் தன்மையைக் காட்டுவதாக உள்ளது.

ஏ.எப்.ஸ்காட், "செவ்வியல் என்பது மேன்மை பொருந்தியது; கிரேக்க உரோம ஆசிரியர்களின் புலமையைக் குறிப்பது. கிரேக்க உரோம இலக்கியங்களின் தொன்மைமிக்க பண்பட்ட நிலையுடன் தொடர்புடையது. செவ்வியல் என்ற சொல்லானது வடிவ உணர்வு, சமநிலை, பொருத்தமாக அமைதல் போன்ற பண்புகளை விளக்கும் செறிவுடையது. இது தன்னறிவு, உண்மை, அடிப்படை உணர்வு முதலியவற்றைக் குறிப்பாக உணர்த்துகின்றது; மரபுகள், விதிகள் முதலியவற்றிற்கும் கட்டுப்பட்டுத் திகழ்கின்றது" என்று விளம்புகின்றார் (எடுத்தாளப்பட்டது - சாரதாம்பாள், செ., 2010:46).

ஜார்ஜ்எல்.ஹார்ட், "தமிழ் மொழி மிகவும் தொன்மை வாய்ந்தது. இது சமஸ்கிருதத்திலிருந்து உருவாகவில்லை. இது இந்தியாவிலேயே தோன்றிய இலக்கிய மரபுடையது. சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீன், சீனம், பாரசீகம், அரபு மொழி ஆகியவற்றுக்கு இணையான செவ்வியல் இலக்கியங்களை இது பெற்றுள்ளது. நவீன இந்தியாவின் பண்பாட்டு மரபு ஆகியவற்றிற்கு முதன்மை ஆதாரமாகத் தமிழ்மொழி பயன் பட்டு வருகின்றது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

(எடுத்தாளப்பட்டது, அருணாசலம், மு., ஜெயக்குமார், பா., 2011:15)

### செவ்வியல் பண்புகள்

செவ்வியல் இலக்கியம் பற்றிக் கூறும் அறிஞர்பெருமக்கள்பல்வேறுபண்புகளைக் குறித்து நிற்பர். அவ்வரிசையில் ச.அகத்தியலிங்கம், மகோன்னதமான ஒரு மேம்பாடு (Excellence) செம்மாந்த குறிக்கோள் (Value), சிறந்த ஒரு நிலைபேறு (Permanence) என்ற மூன்றின் அடிப்படையிலும் சிறந்து விளங்கும் இலக்கியங்கள் செவ்விலக்கியங்களாகும் (அகத்தியலிங்கம், ச.,2010:85) என்று செவ்விலக்கியங்களுக்கான பண்புகளைப் பட்டியலிட்டுள்ளார். மேலும், வா.செ.குழந்தைசாமி, “செவ்வியல் தன்மை என்பது தொன்மை (Antiquity), ஒத்தசைவு(Harmony), தெளிவு(Clarity), தன்னடக்கம்(Restraint), கண்ணியம் (Serenity), இலட்சியம் (Idealism), பொதுமை (Universality), பகுத்தறிவு (Reason), ஒழுங்கு (Order), கண்ணோட்டம் (Humaneness)” முதலிய கூறுகளைக் குறிப்பிட்டுள்ளார் (குழந்தைசாமி, வா.செ., 2011:51). செ.சாரதாம்பாள் செவ்வியல் பண்புகளாக இருபத்து நான்கினைப் பட்டியலிட்டுக் கூறுகின்றார். அவற்றுள் “தொன்மையுடைமையும் தலைமையுடைமையும், மரபுடைமை, காலவரையறையுடைமையும் சமுதாயச் சித்திரிப்பும், மேன்மை பொருந்திய பாடுபொருள் வெளிப்படுத்தப்படும் முறை, பாடுபொருள் முடிவுறும் தன்மை, மகிழ்வுறுத்தலும் அறிவுறுத்தலும், யாப்பமைதி, மாந்தர் படைப்பு, இயற்கைப் புனைவும் கற்பனையும், தொன்ம மரபுக் கூறுகள்” என்பனகுறிப்பிடத்தக்கவை (சாரதாம்பாள், செ., 2010:107).

### தொன்மை

செவ்வியல் பண்புகளுள் இன்றியமையாத ஒன்று தொன்மை. இச்சொல் பழமை என்ற பொருளில் பயின்று வருகின்றது. காலத்தால் மிகப் பழமையான இலக்கியத்தைத் தொன்மை இலக்கியம் என்பர். கிரேக்கம், இலத்தீன், அரேபியம், பாரசீகம், வடமொழி, சீனம், ஹீப்ரு உள்ளிட்ட மொழிகள் தொன்மையுடையனவாகக் கருதப்படுகின்றன. இவ்வரிசையில் தமிழ் மொழியும் அடங்கும். தமிழின் செவ்விலக்கியக் காலமாகக் கி.மு.3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு வரை எனச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் வரையறுத்துள்ளது. அக்காலத்திற்குள் தோன்றியவையாக 41 நூல்கள் இனங்காணப்பட்டுத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இவற்றுள், பத்துப்பாட்டு நூல்களும் அடங்கும். பத்துப்பாட்டு நூல்களின் காலம் பற்றி மா.இராசமாணிக்கனார் கூறுகையில், “குறிஞ்சிப் பாட்டு, பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய நான்கு பாடல்களும் ஏறத்தாழக் கரிகாலன் காலத்தவை என்றும் மலைபடு கடாம், நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு ஆகிய நான்கும் கி.பி.மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை ஆகலாம் என்றும் அனைத்திற்கும் இறுதியில் பாடப்பட்ட சிறுபாணாற்றுப்படை கி.பி. 3ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் இயற்றப் பட்டதாகலாம் எனக் கொள்வது பொருத்தமாகும்” (இராசமாணிக்கனார், மா., 2010:239) என்கின்றார். மேலும், திருமுருகாற்றுப்படையின் காலத்தை வரையறுக்கையில், “திருமுருகாற்றுப்படை சங்ககாலத்திற்குப் பின்பும் (கி.பி.300க்குப் பின்பு) அப்பர், சம்பந்தர்க்கு முன்பும் (கி.பி.600க்கு முன்பு) பாடப்பட்டிருக்கலாம் என்று கூறுதல் பொருத்தமாகும்” (இராசமாணிக்கனார், மா., 2010:248) என்கின்றார். பாண்டியர்கள் சங்கம் வைத்துத் தமிழைப் பேணி வளர்த்தனர். இதனைப் புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின் (மது.762) என்ற மதுரைக்காஞ்சித் தொடரால் அறியலாம். முருகன் பற்றிய தொன்மச் செய் திருமுருகாற்றுப்படையில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. இதில் முருகனின் பிறப்பு, அவனது ஆறுமுகங்களின் சிறப்பு, பன்னிரு

தோள்களின் உருவகக் காட்சி, சூர் கடிந்தது, மாமரம் வெட்டியது, அவுணரை அழித்தது, பிரம்மனைச் சிறைப்படுத்தியது, திருமால், சிவன், இந்திரன் முதலான தெய்வங்கள் பிரம்மனை விடுவிக்க முருகனிடம் வேண்டிக் கொள்வது போன்ற செய்திகள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. திணை நிலைத் தெய்வமாக வழிபடப்பட்ட நிலையிலிருந்து மாறி, உயர்குடிச் சமுதாய மரபுநிலைக்கு உட்படுத்தப்பட்டதைப் பற்றி செ.சாரதாம்பாள் கருத்துரைக்கையில், அந்தணர் வழிபாட்டின் வழி முருகக் கடவுள் வழிபாடு மேனிலையாக்கமும் செய்யப் பட்டதுள்ளது. தமிழ் மரபு வழி முருகனின் தொன்மக்கதை சொல்லப்பட்டுள்ளது. அதாவது, திணைநிலைக் கடவுள் என்ற வட்டத்தில் இருந்த நிலத்தெய்வம், பெருந்தெய்வ நிலைக்கு மேனிலையாக்கம் செய்யப் பட்டிருக்கிறது. முருகன் இனக்குழுச் சமுதாய வழிபாட்டு மரபிலிருந்து உயர்குடிச் சமுதாய மரபுநிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளான் (சாரதாம்பாள்,செ., 2011:120) என்கின்றார். இவரது இக்கூற்று முற்கூறிய கருத்திற்கு அரணாக அமைகின்றது.

## தனித்துவம்

செவ்வியல் இலக்கியங்களுக்கு வேண்டிய ஒரு பண்பு அவற்றின் தனித்துவப் பண்பு. “இது உருவ அடிப்படையிலும் உள்ளடக்க அடிப்படையிலும் அமைவதாகும். எந்த ஒரு செவ்வியல் இலக்கியமும் பிற சிறந்த இலக்கியங்களிலிருந்து மாறுபட்டுத் தனித்தன்மை கொண்டு விளங்க வேண்டும். வேறொரு மொழி இலக்கியத்தின் மொழி பெயர்ப்பாகவோ அல்லது அவை கூறும் பொருளின் விளக்கமாகவோ அவற்றின் விரிவாக்கமாகவோ அல்லது பிரதிபலிப்பாகவோ இருத்தல் கூடாது”(அகத்தியலிங்கம்,ச., 2010 : 27) என்பார் ச. அகத்தியலிங்கம். அந்த அடிப்படையில் பத்துப்பாட்டு நூல்கள் ஒவ்வொன்றும் ஒரு வகையில் தனித்துவமுடையதெனலாம். பாணர், பொருநர், கூத்தர் ஆகியோரை ஆற்றுப் படுத்தும் நோக்கில் படைக்கப்பட்டவையே ஆற்றுப்படை இலக்கியங்கள். இவை ஆற்றுப்படை எனும் புறத்துறைக்குச் சான்றுகளாக அமைகின்றன. மேற்குறிப்பிட்ட கலைஞர்களின் குறையைப் போக்குவதையே மையமாகக் கொண்டு படைக்கப்பட்டவையே இவ்விலக்கியங்கள். அரசர்களின் புகழ் பாடுவனவாக இவை படைக்கப்படாலும் அக்காலத்திய மக்களின் வாழ்வியலைப் பேசு வனவாகவும் அமைந்துள்ளன. முல்லைப்பாட்டு தலைமகளின் இருத்தலைப் பேசுகின்றது. குறிஞ்சிப்பாட்டு தோழி அறத்தொடு நிற்றல் எனும் அகத்துறையை மையமிட்டு அமைகின்றது. நெடுநல்வாடை தலைமகனைப் பிரிந்த தலைமகளின் நிலையைக் கூறுகின்றது. பட்டினப்பாலை செலவழுங்குவித்தல் துறையை விரிவாகப் பேசுகின்றது. மதுரைக்காஞ்சியோ பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு மாங்குடி மருதனார் நிலையாமையை எடுத்துரைப்பதாக அமைகின்றது.

## உலகப் பொதுமை

செவ்வியல் பண்புகளுள் அடுத்து இன்றியமையாத பண்பு உலகப் பொதுமை என்பதாகும். இஃது உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவானதாகும். பத்துப் பாட்டு நூல்கள் இந்நிலையில் தலைசிறந்து விளங்குகின்றன. அகப்பாடல்களாயினும் சரி, புறப்பாடல்களாயினும் சரி, ஆற்றுப்படையாயினும் சரி பொதுமைப் பண்பை மையமாக வைத்தே அவை படைக்கப்பட்டுள்ளன எனக் கூறலாம். எந்த ஒரு சிறந்த இலக்கியமும் இத்தகைய பொதுமையைக் கொண்டிலங்க வேண்டும் (ச.அகத்தியலிங்கம், 2010:102) என்பார் ச.அகத்தியலிங்கம். அவரது கூற்றிலிருந்து, பத்துப்பாட்டு நூல்கள் உலகப் பொதுமையோடு திகழ்கின்றன என்பதை அறியமுடிகின்றது. 1. அன்பு 2. ஈகை 3. விருந்தோம்பல் ஆகிய உலகப் பொதுமைகளைப் பத்துப்பாட்டில் காணலாம்.

அ) அன்பு அனைத்து மக்களையும் ஈர்க்கக் கூடிய ஒன்று. இஃது அனைவருக்கும் பொதுவாக வேண்டப்படுவது. அன்பினை மையமாகக் கொண்டு இயற்றப்பட்டவையே முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை என்பன. மதுரைக்காஞ்சி கூட பாண்டியன் தலையானங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் போர்களிலும் உலக இன்பங்களிலுமே தோய்ந்து போகாதிருக்க, அவனது அவைக்களப் புலவரான மாங்குடி மருதனார் பாடியதாகும். இது அவனுக்கு அறிவுரை கூறும் பாங்கில் அமைந்தது. இதுவும் ஒரு வகையான அன்பின் வெளிப்பாடே. அதனால்தான் அவர்,

**"பொற்பு விளங்கு புகழ் அவை**
**நிற்புகழ்ந்து ஏத்த**
**இலங்குஇழை மகளிர் பொலங்கலத்து**
**ஏந்திய**
**மணம்கமழ் தேறல் மடுப்ப நாளும்**
**மகிழ்ந்து இனிது உறைமதி பெரும**
**வரைந்து நீ பெற்ற நல் ஊழியையே"**
**(மது.778-782) என்று பாடியுள்ளார்.**

ஆ) ஈகை என்னும் உயரிய பண்பு தம்மிடமுள்ள பொருளைப் பிறருக்குக் கொடுத்தலைக் குறிக்கும். கொடை, வள்ளல் தன்மை போன்ற உயரிய பண்புகள் அனைவரிடத்தும் இருக்க வேண்டிய பண்புகளாகும். பத்துப்பாட்டு நூல்களுள் செம்பாதியாக அமையும் ஆற்றுப்படை நூல்கள் இத்தகைய ஈகை பண்பையே வற்புறுத்துகின்றன. அவை தாம் பெற்ற பெருவளம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் அமைந்தவை. 1. திருமுருகாற்றுப்படை (புலவராற்றுப்படை) முருகனின் அருளைப் பெற்ற புலவன் ஒருவன் முருகனது அருளைப் பெறவிரும்பும் மற்றொரு புலவனை ஆற்றுப்படுத்துவது. இது பிற ஆற்றுப்படை நூல்களிலிருந்து மாறுபட்டது. 2. பொருநராற்றுப்படை கரிகாலனின் ஈகையைப் பேசுகின்றது. அவன் தம்மை நாடி வரும் பொருநர்க்குப் பெண் யானைகளோடு சேர்ந்த ஆண் யானைகளையும் அவற்றின் கன்றினையும் ஏற்றுக்கொள்ளுமாறு வழங்குவதாகவும் அதன்பின் ஊர்திகள், ஆடைகள், அணிகலன்கள் முதலியவற்றைத் தான் அறிந்த அளவாலே மேன்மேலே தருவதாகவும் பேசப்படுகின்றான். 3. பெரும்பாணாற்றுப்படை - பிறர்க்கு வழங்கினும் வற்றாச் செல்வத்தோடும் தலையாட்டம் வாய்ந்த குதிரைகளையும் வலிமைமிக்க களிறுகளையும் பெற்றுக் கொண்டு இளந்திரையனிடமிருந்து வருவதாகப் பெரும்பாணன் கூறுகின்றான். இதில் இளந்திரையனின் ஈகைத்தன்மை வெளிப் படுகின்றது. 4. சிறுபாணாற்றுப்படையில் நல்லியக்கோடன் யானையையும் தேரையும் கொடையாக வழங்குபவனாகக் காட்டப்படுகின்றான். 5. மலைபடுகடாமில் நன்னன் பொற்றாமரை, அணிகலன்கள், தேர்கள், யானைகள், ஏறுகளை உடைய பசுக்கள், குதிரைகள், முதலிய பெருஞ்செல்வங்களைக் கொடையாக வழங்கினான். இவர்களைத் தவிர, சிறுபாணாற்றுப்படையில் கடையெழு வள்ளல்களின் கொடைத்தன்மை பெரிதும் பேசப்பட்டுள்ளது.

இ) விருந்தோம்பல் - ஆற்றுப்படை நூல்களில் குடிமக்களின் விருந்தோம்பும் பண்பைக் காணலாம். விருந்தினரை உபசரிக்கும் பண்பு தலைமகளிடத்து வேண்டப்படும் பண்புகளுள் ஒன்று. ஐவகை நிலத்தாரின் விருந்தோம்பும் பாங்கினை ஆற்றுப்படை இலக்கியங்கள் பகர்கின்றன. மேலும், குறிஞ்சிப்பாட்டில் இல்லறத்தானின் கடமைகளுள் ஒன்றாகவே விருந்தோம்புதல் கருதப்பட்டுள்ளது. இதனை,

**பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்**
**வசைஇல் வான்திணைப் புரையோர்**

**கடும்பொடு**
**விருந்து உண்டு எஞ்சிய மிச்சில்**
**பெருந்தகை**
**நின்னொடு உண்டலும் புரைவது**
***(குறி.204-207)***

என வரும் அடிகள் மூலம் தெளியலாம்.

### பாடுபொருளுக்கேற்ற வடிவத்தைக் கையாளுதல்

பத்துப்பாட்டு நூல்களுள் பட்டினப் பாலையைத் தவிர, பிற நூல்கள் அகவல் யாப்பில்அமைந்துள்ளன."பட்டினப்பாலை மட்டும் வஞ்சிப்பா இடையிடையே மிகுந்த அகவல் யாப்பில் அமைந்துள்ளது. அகவற்பாவே தொல்தமிழ் யாப்பாகக் கருதப்படுகின்றது. ஏனென்றால், சமய உணர்வும் குழுத்தலைவனை வாழ்த்தும் தன்மையும் கொண்ட இனக்குழுச் சமுதாயத்தில் அகவல்தான் தோன்றியிருக்கக்கூடும். இதுவே பா ஆக்கத்தில் எளிமையானது. எந்தவிதமான - அதிகமான கட்டுப்பாடுகள் இல்லாத பா அகவற்பாவாகும். அதற்கு அடுத்து இனக்குழுக்கள் ஒன்றை ஒன்று அழிக்கத் தொடங்கும் நிலவுடைமையுணர்வு பூத்துவிட்ட சமுதாயத்தில் வஞ்சிப்பா தோன்றியது. இதுவும் அகவற்பாவைப் போன்று எளிமையானது" *(பிச்சை, அ., 2011:66)* என்பார் அ.பிச்சை. ஆக, இதிலிருந்து பத்துப்பாட்டு நூல்களின் வடிவம்தெற்றெனவெளிப்படக்காணலாம். பாடுபொருளுக்கேற்ற வடிவத்தையே சங்கப் புலவர்கள் கையாண்டுள்ளனர். இலக்கியத்தில் குறிக்கப்படும் பாடுபொருள் உயர்ந்ததாக இருப்பதுடன் சொற்களும் அதற்கேற்ப அமைய வேண்டும் என்பது பொது விதியாகவே திகழ்கின்றது. எனவே தான் செ.சாரதாம்பாள், "செவ்வியலின் பொருளானது முழுதும் வடிவத்துடன் இணைந்தே காணப்படும். பெரிதும் தேர்ந்தெடுக்கப்பட்ட கருத்துக்களையும் அக்கருத்துக்களுக்குத் தேவையான விளக்கங்களையும் கொண்டு திகழும்" *(சாரதாம்பாள், செ., 2010:55)* என்கின்றார். பத்துப்பாட்டில் உள்ள ஒவ்வொரு நூலும் அவற்றின் பாடுபொருளுக்கேற்றவாறும் மொழியமைப்பிற்கேற்றவாறும் சிறப்புத் தன்மையைப் பெற்றுத் திகழ்கின்றன. ஆற்றுப்படை இலக்கியங்களின் பாடுபொருள் ஒன்றாயிருந்தாலும் அவை மொழியமைப்பிற்கேற்பச் சிறந்து விளங்குகின்றன. இலக்கியப் பாடு பொருள் என்பது விழுமியம் தழுவியதாக இருந்தது. அதன் அடிப்படையில் இலக்கியக் கொள்கைகள் தோன்றின. பத்துப்பாட்டு இலக்கியங்களை அகம், புறம் என்ற அடிப்படையிலும் உள்ளுறை, இறைச்சி, உவமை, உருவகம் ஆகியவற்றின் அடிப்படையிலும் பாடுவதைப் புலவர்கள் அறிந்திருந்தனர். இவை அக்காலத்திய இலக்கியக் கொள்கைகளாக அமைகின்றன.

### நிலைபேறுடைமை

நிலைபேறு என்பது செவ்வியலுக்கு வேண்டப்படும் மற்றோர் இன்றியமையாத பண்பு. ஒரு சிறந்த இலக்கியம் ஒரு காலத்தில் புகழ் பெற்றுத் திகழ்ந்ததைப் போலவே அடுத்தடுத்த காலத்திலும் புகழ் பெற்றுத் திகழ வேண்டும். அதுவே செவ்வியல் எனும் தகுதியைப் பெறும். காலப்போக்கில் வழக்கிழந்து போய்விடும் இலக்கியங்கள் செவ்வியல் தகுதியைப் பெறா. அந்தவகையில், பத்துப்பாட்டு நூல்கள் தமிழர்களால் சாகாவரம் பெற்றவைகளாக மாறிவிட்டன. *2000* ஆண்டுகளுக்கும் மேலாகநிலைத்துநிற்கின்றன. இதுவே இதன் செவ்வியல் தன்மையைப் பறைசாற்றும். பத்துப்பாட்டு நூல்கள் அவை தோன்றிய நாட்டின் வளத்தையும், அம்மக்களின் கலை, பண்பாடு போன்றவற்றையும் எடுத்துரைக்கின்றன. நெடுநல்வாடையில் அரசிபடுத்திருக்கும் வட்டக்கட்டில் நுண்ணிய வேலைப்பாடு உடையதாகக் காட்டப்படுகின்றது *(நெடு. 115-135)*. இதன்மூலம் அக்கால மக்களின் கலை வெளிப்பாட்டை, கலையுணர்வை அறிந்து கொள்ளலாம்.

### காரண காரிய இயைபு

செவ்வியல் அறிஞர்கள், செவ்வியல் பண்புள்ள இலக்கியத்தின் எந்த ஒரு கூறும் காரண காரிய இயைபுடன் கூறப்பட வேண்டும் என்பர். பத்துப்பாட்டில் உள்ள ஒவ்வொரு இலக்கியத்திலும் காரண காரிய இயைபு அமைந்திருப்பதைக் காணலாம். சிறுபாணாற்றுப்படையின் கதைக்கோப்பு பின்வருமாறு அமைந்துள்ளது. 1. பாலை நிலத்தின் இயல்பு 2. விறலியின் வழிநடைத் துயரம் 3. சிறுபாணன் தனது இசையால் தனது வறுமையை மறந்திருக்கும் நிலை 4. மூவேந்தர்கள் இன்மை 5. கடையெழு வள்ளல்கள் இல்லாத நிலை 6. நல்லியக்கோடனைக் காண்பதற்கு முன்பிருந்த சிறுபாணரின் வறுமைநிலை 7. அவனைக் கண்டபின்பு பெற்ற வளம் 8. எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகிய நகரங்களில் கிடைக்கும் வரவேற்பும் விருந்தோம்பும் 9. நல்லியக் கோடனின் நகரச் சிறப்பும் அவனது கொடைத்திறமும் இவ்வாறு அதன் கட்டமைப்புள்ளது. முல்லைப்பாட்டிலும் இத்தகைய காரண - காரிய இயைபைக் காணலாம். இதன் பொருட்கூறுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம். 1 முதல் 23 அடிகள் வரை கார்காலத்தின் மாலைப்பொழுதையும் தலைமகளின் பிரிவாற்றாமையையும் எடுத்துரைக்கின்றது. அடுத்துள்ள 57 அடிகள் பாசறையின் அமைப்பையும் தலைமகனின் நிலையையும் பாடுகின்றன. இதனைத் தொடர்ந்து வரும் 9 அடிகள் தலைமகளின் துயரத்தை மீண்டும் விளக்குகின்றன. இறுதியில் இடம்பெறும் 14 அடிகள் கார்காலத்தின் சிறப்பையும் தலைமகன் திரும்பி வருவதையும் எடுத்துக் கூறுகின்றன. இவ்வாறு தலைமகளின் நிலையையும் தலைமகனின் நிலையையும் மாறிமாறிக் காட்டி, பொருள் நுட்பத்துடன் இணைக்கும் திறனை நப்பூதனார் கையாண்டுள்ளார்.

### கதைமாந்தர் படைப்பு

“செவ்வியல் இலக்கியங்களில் இடம் பெறும் பாத்திரங்கள் அனைத்தும் பொது மனித மாதிரிகளையே அடிப்படையாகக் கொண்டு திகழும். இத்தன்மை கொண்ட பொது மனித மாதிரிகள் சமுதாயம் தழுவியதாக அமையும்” (சாரதாம்பாள், செ., 2010 : 233) என்பார் செ.சாரதாம்பாள். பத்துப்பாட்டில் உள்ள அக நூல்கள் பெயர் சுட்டா மரபின் அடிப்படையில் தலைமகன், தலைமகள், தோழி, செவிலி, நற்றாய் எனும் விழுமிய மாந்தர்களையே படைத்துள்ளன. இவர்களின் செம்மாந்த வாழ்வினை அக நூல்கள் பறைசாற்றுகின்றன. ஆற்றுப்படைகள், மதுரைக்காஞ்சி உள்ளிட்டவை அரசர்களின் அல்லது வள்ளல்களின் ஆட்சிச்சிறப்பையும் கொடைத்திறத்தையும் கூறுகின்றன.

### மரபுடைமை

செவ்வியலக்கியங்கள் மரபைப் பின்பற்றியே அமைய வேண்டும் என்பர். மரபு பற்றி நன்னூல், எப்பொருள் **எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே (நன்.சொல்.பொது.37)** என்கின்றது. அதாவது முன்னோர் மரபைப் பின்னுள்ளோர் பின்பற்றுவதாகும். சங்க இலக்கியங்கள் யாவும் தொல்காப்பிய மரபைப் பின்பற்றியவை. பத்துப்பாட்டிலுள்ள மலைபடுகடாம், சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை ஆகியவை தொல் காப்பியம் நவிலும் ஆற்றுப்படை இலக்கண மரபைப் பின்பற்றி இயற்றப்பட்டவை.

> **“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
> **ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
> **பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**
> **சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்”**
> **(தொல்.1037)**

திருமுருகாற்றுப்படை மட்டும் இவற்றிலிருந்து மாறுபட்டது. ஏனெனில்,

இது ஒரு பக்தி நூல். முருகன் அருள் பெற்ற ஒருவன் பக்தி மிகுந்த மற்றோர் அடியவனை அம்முருகனிடத்து ஆற்றுப்படுத்துதல் என்பது இதன் பொருளாகும். இது பற்றி மா.இராசமாணிக்கனார் கருத்துரைக்கையில், "இது தொல்காப்பிய இலக்கண விதிக்கு மாறுபட்டது. அஃதாவது, சமயத்துறையில் ஆற்றுப்படுத்தி நூல் செய்தல் தொல்காப்பியர் காலத்தில் இல்லை என்பது அவரது நூற்பாவால் தெரிகிறது" (இராசமாணிக்கனார்,மா., 2010:212) என்கின்றார். ஆக, தொல்காப்பிய மரபைப் பின்பற்றாத ஆற்றுப்படையாகத் திருமுருகாற்றுப்படை அமைந்துள்ளது எனலாம்.

அடுத்தது, குறிஞ்சிப்பாட்டு இலக்கியம். இது தொல்காப்பியம் நவிலும் தோழி அறத்தொடு நிற்றலை அடிப்படையாகக் கொண்டது.

**"எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்**
**கூறுதல் உசாதல் ஏதீடு தலைப்பாடு**
**உண்மை செப்பும் கிளவியொடு**
**தொகைஇ**
**அவ்எழு வகைய என்மனார் புலவர்"**

**(தொல்.1153)**

என அறத்தொடு நிற்றலுக்குத் தொல்காப்பியம் இலக்கணம் வகுக்கின்றது. மேற்குறிப்பிட்ட இவ்ஏழு நிலைகளுள் கூறுதல் உசாதல் என்ற ஒன்றை நீக்கி ஏனைய ஆறு நிலைகளிலும் தலைமகளின் களவொழுக்கம் தோழியால் செவிலியிடம் வெளிப்படுத்தப்படுகின்றது.

### தனித்தன்மை

பத்துப்பாட்டில் உள்ள ஒவ்வொரு இலக்கியமும் தனித்துவம் வாய்ந்தது. தன்னளவில் முழுமை பெற்றது. பாடுபொருள் அடிப்படையில் இம்மாறுபாடு அமைந்துள்ளது.

| வ.எண் | நூல்கள் | தனித்தன்மை |
|---|---|---|
| 1. | ஆற்றுப்படை நூல்கள் | ஆற்றுப்படுத்துதலை நோக்கமாகக் கொண்டவை |
| 2. | முல்லைப்பாட்டு | இருத்தல் உரிப்பொருளை அடிப்படையாகக் கொண்டது |
| 3. | குறிஞ்சிப்பாட்டு | தன் மனத்தால் நினைத்தவனையே மணம் செய்து கொள்ளும் வாழ்வறம் - அறத்தொடு நிற்றல் |
| 4. | நெடுநல்வாடை | தலைமகனைப் போரின் காரணமாகப் பிரிந்து வாழும் தலைமகள்; தலைமகன் பாசறையில் தங்கி இருத்தல். வாடைக்காற்றுத் தலைமகளுக்குத் துன்பத்தையும் அதுவே தலைமகனுக்கு நல்ல வாடையாக அமைந்து இன்பத்தையும் தருகின்றது. பாலைக்குரிய உரிப்பொருள். |
| 5. | மதுரைக்காஞ்சி | நிலையாமையை எடுத்துரைப்பது |
| 6. | பட்டினப்பாலை | செலவழுங்குவித்தல் - பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறும் பாலைத்திணை |

### சமுதாயச் சித்திரிப்பு

பத்துப்பாட்டு நூல்கள் குறிப்பிட்ட காலச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்றன. இவை சங்க காலச் சமுதாயத்தைப் பாடும் பாடல்களாகவே காணப்படுகின்றன. நிலப்பின்னணி காட்டும் சமுதாயம், முதல் - கருப்பொருள்களின் வழி அறியலாகும் சமுதாயம், நில எல்லைகளும் பெருவழிகளும் உணர்த்தும் சமுதாயம், ஆற்றுப்படை நூல்கள் எடுத்து ரைக்கும் சமுதாயம் உள்ளிட்ட நிலைகளில் இவற்றைக் காணலாம்.

| நூல்கள் | சமுதாயச் சித்திரிப்பு |
|---|---|
| **ஆற்றுப்படை நூல்கள் உணர்த்தும் சமுதாயம்** | |
| திருமுருகாற்றுப்படை | பக்திச் சமுதாயத்தைப் பிரதிபலித்தல் |

| | |
|---|---|
| பொருநராற்றுப்படை | பொருநனின் வறுமைநிலை அதைப் போக்கிய கரிகாலனின் வள்ளன்மை |
| சிறுபாணாற்றுப்படை | சிறுபாணனின் வறுமை, அதைப் போக்கிய நல்லியக்கோடனின் வள்ளல் தன்மை |
| பெரும்பாணாற்றுப்படை | பெரும்பாணனின் வறுமையும் இளந்திரையனின் கொடையும் |
| மலைபடுகடாம் | நன்னன்சேய் நன்னனிடம் வறுமையில் வாடிய கூத்தனை வழிப்படுத்தியது |
| **நிலப்பின்னணி காட்டும் சமுதாயம்** | |
| முல்லைப்பாட்டு | முல்லை நிலம் - ஆயர்களின் வாழ்வியல் |
| குறிஞ்சிப்பாட்டு | குறிஞ்சி நிலம் - குறவர்களின் வாழ்வியல் - கொடிச்சியர் தினைப்புனம் காத்தல் |
| பட்டினப்பாலை | பாலை நிலம் - செலவழுங்குவித்தல், கரிகாலனின் நாட்டுச் சிறப்பும் சமுதாயமும் - வணிகர் சிறப்பு |
| மதுரைக்காஞ்சி | வலைஞர் இயல்பு, முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்களின் இயல்புகள் |
| **நில எல்லைகளும் பெருவழிகளும் உணர்த்தும் சமுதாயம்** | |
| திருமுருகாற்றுப்படை | பரங்குன்றம், ஆவினன்குடி, அலைவாய், ஏரகம், பழமுதிர்ச்சோலை ஆகிய ஐந்து இடங்கள் |
| பெரும்பாணாற்றுப்படை | நீர்ப்பெயற்று என்னும் துறைமுகத்திலிருந்து காஞ்சி நகரத்திற்குச் செல்லும் வழி |
| சிறுபாணாற்றுப்படை | வஞ்சி, மதுரை, உறந்தை நகரங்களின் சிறப்பும் மக்களின் வாழ்க்கை முறைகளும் |
| மதுரைக்காஞ்சி | மதுரையின் கவின்மிகு காட்சி |

இவ்வாறு பத்துப்பாட்டு நூல்கள் தாம் தோன்றிய சமுதாயத்தைச் சித்திரித்துக் காட்டுகின்றன. அக்காலத்திய ஒட்டுமொத்தமான பண்பாட்டையும்நாகரிகத்தையும்தாம்தோன்றிய சமுதாயத்தையும் வெளிப்படுத்துகின்றன.

### கட்டுப்பாட்டுக்குட்பட்ட கற்பனை

சங்கப் புலவர்கள் கற்பனையைக் கூட ஓர் எல்லைக்குட்பட்டே கையாண்டுள்ளனர். இக்கற்பனை நடப்பியல் தழுவியதாக அமைய வேண்டும் என்று கருதாமல் உயர்வு நவிற்சித் தழுவியதாக அமைந்திருந்தது. அதுவும் காரண - காரிய இயைபுடையதாகவே இருந்தது. பத்துப்பாட்டில் இருந்து இதற்குச் சான்றினைக் காட்டலாம்.

சிறுபாணாற்றுப்படையில் தாமரையின் கொங்கினை நீலக்கண்ணினை உடைய ஆண்வண்டு கவர்கின்றது. இது பார்ப்பதற்கு நிலவினைப் பாம்பு விழுங்குவதைப் போல் இருப்பதாக நல்லூர் நத்தத்தனார் கற்பனைச் செய்து படைத்துள்ளார். இதனை,

**முள்ளரைத் தாமரை முகிழ்விரி**
**நாட்போது**
**கொங்குகவர் நீலச் செங்கட் சேவல்**
**மதிசேர் அரவின் மானத் தோன்றும்**
**(சிறு.183-185)**

என்ற அடியின் மூலம் தெளியலாம்.

### வருணனை

பாடுபொருளைவாசகனின்மனதில்பதிய வைக்க படைப்பாளர்கள் வருணனைகளைக் கையாள்கின்றனர். "ஒரு படைப்பினை நீட்டுவதற்கோ அல்லது சுருக்குவதற்கோ வருணனை ஒரு கருவியாக அமைகின்றது" என்பார் ச.பொ.சீனிவாசன். (சீனிவாசன், ச.பொ., 2013:17) இவ்வருணனை, அடைகளாகவும் உவமைகளாகவும் உருவகங்களாகவும் அணிகளாகவும் இலக்கியங்களில் பயின்று வரக்

காணலாம். பத்துப்பாட்டில் நிலம் சார்ந்த வருணனை, மக்கள் சார்ந்த வருணனை, விலங்குகள் சார்ந்த வருணனை, தாவரங்கள் சார்ந்த வருணனை ஆகியவை இடம்பெற்றுள்ளன.

| வ.எண் | நூல் பெயர் | வருணனை வரும் அடிகள் |
|---|---|---|
| | **நிலம் சார்ந்த வருணனை** | |
| 1. | குறிஞ்சிப்பாட்டு, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம் | குறிஞ்சி நில வருணனை |
| 2. | முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை | முல்லை நில வருணனை |
| 3. | ஆற்றுப்படை நூல்கள் | மருத நில வருணனை |
| 4. | சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மதுரைக்காஞ்சி | நெய்தல் நில வருணனை |
| 5. | சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மதுரைக்காஞ்சி மலைபடுகடாம் | பாலை நில வருணனை |
| | **மக்கள் சார்ந்த வருணனை** | |
| 1. | குறிஞ்சிப்பாட்டு - தலைமகள், தலைமகன், தோழி | அகமாந்தர் பற்றிய வருணனை |
| 2. | முல்லைப்பாட்டு - தலைமகள், தலைமகன் | |
| 3. | நெடுநல்வாடை - தலைமகள், தலைமகன் | |
| 4. | பட்டினப்பாலை - தலைமகள் | |

## தேர்ந்தமைக்கப்பட்ட சொல்லாட்சி

செவ்வியலுக்கே உரிய பண்பு தேர்ந்தமைக்கப்பட்ட சொல்லாட்சிதான். புலவன் சொல்லவரும் கருத்திற்கேற்பச் சொல்லாட்சிகளைக் கையாள்கின்றான். பொருளுக்கேற்ற பொருத்தமான சொற்களைக் கையாளும் புலவனின் படைப்பே என்றென்றும் நிலைத்து நிற்கும். அந்தவகையில் பத்துப்பாட்டு நூல்கள் சிறந்த சொல்லாட்சிகளைத் தன்னகத்தே கொண்டிலங்குகின்றன.

## சான்றுகள்

செலவிடை அழுங்கல் எனும் அகத்துறையை அடிப்படையாகக்கொண்டுஎழுதப்பட்டது பட்டினப்பாலை. இந்நூலில் தலைமகனின் உட்கிடக்கையைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பின்வருமாறுஅமைத்துள்ளார். கரிகாலனின் சிறப்பைப் பேசும் இந்நூலில், அகப்பொருளை மிக நுட்பமாகக் கையாண்டுள்ளார் புலவர்.

**“முட்டாச்சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே .............”**
**(பட்டி.218-220)**

............................

**“திருமா வளவன் தெவ்வர்க்கு ஓக்கிய
வேலினும் வெய்ய கானம், அவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே”**
**(பட்டி.299-301)**

இதுபோலவே, முல்லைப்பாட்டில் இடம்பெறும் இன்னே வருகுவர் தாயர் (முல்.16) என்ற சொற்றொடர் சூழல் பொருளாக வெளிப்பட்டு, குறிப்பிட்ட மனவுணர்வையும் வெளிப்படுத்துகின்றது.

இத்தொடர் பயன்படும் சூழலைக் கவனிக்க வேண்டும். தலைமகனைப் பிரிந்து இல்லத்தில் கவலையோடு ஆற்றியிருக்கிறாள் தலைமகள். அப்போது, மாலைப்பொழுதில் வயது முதிர்ந்த பெண்டிர் முல்லைப் பூக்களையும் நாழியில் நெல்லையும் எடுத்துக் கொண்டு, தெய்வத்தை வணங்கி நற்சொல் கேட்கும் பொருட்டுச் செல்கின்றனர். அவ்வமயம், சிறிய கயிற்றால் கட்டப்பட்ட பச்சிளங்கன்றுகள் பாலுண்ணாமையால் ஏற்பட்ட பசியால் வருந்தி நிற்கின்றன. அதைக் கண்ட பெண்ணொருத்தி அக்கன்றுகளை நோக்கி, "....... **கைய/ கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர/ இன்னே வருகுவர் தாயர்**" (முல்.14-16) என்று குறிப்பிடுகின்றாள். அதைக் கேட்ட பெருமுதிர் பெண்டிர், போர்மேற் சென்ற தலைமகன் விரைவில் வினை முடித்து வந்துவிடுவான். எனவே, "நீ உன் மனத்தடுமாற்றத்தால் உற்ற வருத்தத்தைப் போக்கி, ஆற்றியிருக்க" எனக் கூறுகின்றனர். இவ்வாறு முல்லைப்பாட்டில் இடம்பெறும் ஒரு குறிப்பிட்ட சொல்லே தலைமகளின் துயரத்தை நீக்குகின்றது எனில் மிகையன்று.

குறிஞ்சிப்பாட்டு முழுக்க முழுக்க தோழியின் சொல்வன்மையைக் காட்டுகின்றது. அவள் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு சொல்லும் நன்கு சிந்தித்துத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவே அமைகின்றது. தோழி செவிலியிடம் பேசுகையில், **அன்னாய் வாழி வேண்டு அன்னை** என்று விளித்துத் தொடங்குகின்றாள். அதைத் தொடர்ந்து, தலைமகளின் நிலையை, "**மாதரும் மடனும் ஓராங்குத் தணப்ப / நெடுந்தேர் எந்தை அருங்கடி நீவி / இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென / நாம் அறிவுறாலின் பழியும் உண்டோ?/... ஆனாச் சிறுமையள் இவளும் தேம்பும்**" (குறி.19-26) என்று கூறி, செவிலி அக்களவொழுக்கத் தினை எடுத்துக் கொள்ளும் மனப்பாங்கு எவ்வாறு இருக்கும்? என்பதையும் கூறுகின்றாள். இதனை, "**இகல்மீக் கடவும் இருபெரு வேந்தர் வினையிடை நின்ற சான்றோர் போல இருபேர் அச்சமோடு யானும் ஆற்றலென்**" (குறி.27-29)" என்ற அடிகளின் வழி அறியலாம். மேலும், தலைமகளின் களவொழுக்கத்தினைக் குறிப்பிடும் முன்பு, "**நிகழ்ந்த வண்ணம் நீநனி உணரச் செப்பல் ஆன்றிசின் சினவாதீமோ**" (குறி.33,34) என்று கூறும்பாங்கு நினைத்தற்குரியது.

## நிறைவுரை

நிறைவாக, கிரேக்க, உரோமானிய இலக்கியங்களைப் போன்றே தமிழிலுள்ள சங்க இலக்கியங்கள் செவ்வியல் தகுதியுடையனவாக அமைந்துள்ளன. அவற்றுள் பத்துப்பாட்டு நூல்கள் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்றன. செவ்வியலுக்குரிய பண்புகளாக அறிஞர்கள் வரையறுத்துத் தரும் தொன்மை, தனித்துவம், உலகப் பொதுமை, பாடு பொருளுக்கேற்ற வடிவத்தைக் கையாளுதல், நிலைபேறுடைமை, காரண - காரிய இயைபுடைமை, கதைமாந்தரைப் படைக்கும் விதம், மரபைப் பின்பற்றும் பாங்கு, தனித்தன்மை, சமுதாயச் சித்திரிப்பு, கற்பனையைக் கட்டுப்பாட்டுக்குட்பட்டு கையாளுதல், வருணனை, தேர்ந்தமைக்கப்பட்ட சொல்லாட்சிகள் உள்ளிட்ட கூறுகள் பத்துப்பாட்டு நூல்களுக்குப் பொருந்தி வருகின்றன.

## துணைநூற் பட்டியல்

1. அகத்தியலிங்கம், ச. (2010) சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. அருணாசலம், மு. ஜெயக்குமார், பா. (2011) தமிழும் உலகச் செம்மொழிகளும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.
3. இராசமாணிக்கனார், மா. (2010) சங்க இலக்கிய வரலாறு மா.ரா.களஞ்சியம் - III, காவ்யா, சென்னை.
4. இளவரசு, சோம. (2007) நன்னூல் சொல்லதிகாரம் காண்டிகையுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

5. குணசேகரன், கரு.அழ. ஜீன் லாறன்ஸ், செ. (2011) உலகச் செம்மொழிகள் (கருத்தரங்கக் கட்டுரைகள்), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
6. குழந்தைசாமி, வா.செ. (2011) உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் தமிழ், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.
7. சாரதாம்பாள், செ. (2010) செவ்வியல், செல்லப்பா பதிப்பகம், மதுரை.
8. சாரதாம்பாள், செ. (2010) சங்கச் செவ்வியல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
9. சீனிவாசன், ச.பொ. (2013) பத்துப் பாட்டில் வருணனை மரபுகள், சேகர் பதிப்பகம், சென்னை.
10. சுப்பிரமணியன், ச.வே. (2009) தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
11. சூரியநாராயண சாஸ்திரியார், வி.கோ. (2010) தமிழ் மொழியின் வரலாறு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
12. நாகராசன், வி. (2004) பத்துப்பாட்டு - இரண்டாம் பகுதி (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.
13. பிச்சை, அ. (2011) சங்க இலக்கிய யாப்பியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.
14. மோகன், இரா. (2004) பத்துப்பாட்டு - முதல் பகுதி (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.